Australian Government

COVID-19 VACCINATION

# ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள்: பொதுவான கேள்விகள்

13 அக்டோபர் 2021 அன்று இருந்தவாறு இந்தத் தகவல்கள் துல்லியமானவை.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை நான் ஏன் இட்டுக்கொள்ளவேண்டும்?

‘கோவிட்-19’ மிகவும் பாரதூரமானதொரு நோயாக ஆகக்கூடும். குறிப்பாக, நமது சமூகத்தில் பாதிப்புறும் நிலையில் இருப்பவர்களுக்கு இது ஆபத்தானதாகும். ‘கோவிட்-19’ காரணமாக மிகவும் நோய்வாய்ப்படுவதிலிருந்து அல்லது மரணமடைவதிலிருந்து உங்களையும் உங்களுடைய சமூகத்தினரையும் பாதுகாத்துக்கொள்வதற்கான மிகச் சிறந்த வழிகளில் தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொள்வது ஒன்றாகும்.

இந்த வைரஸ்-இன் பரவலைத் தடுக்க ‘கோவிட்-19’ தடுப்பூசிகள் உதவுகின்றன என்று ஆரம்ப கட்டச் சான்று காண்பிக்கிறது. தடுப்பூசியை இட்டுக்கொள்வதன் மூலம் இந்த வைரஸ்-இன் பரவல் வேகத்தை நம்மால் குறைக்க இயலும்.

நாம் வாழும் விதத்தினை ‘கோவிட்-19’ மாற்றிவிட்டிருக்கிறது. இன்னும் அதிகமானவர்கள் தடுப்பூசி மருந்துகளை இட்டுக்கொள்வார்களேயானால், ‘கோவிட்-19’ தொற்றின் திடீர்-வெடிப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியம் குறைவாக இருக்கும்.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் எவ்வாறு செயலாற்றுகின்றன?

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் மற்ற தடுப்பூசி மருந்துகளைப் போலச் செயலாற்றுகின்றன. உங்களுக்கு நோயை ஏற்படுத்தாமலேயே, நோயை ஏற்படுத்தும் வைரசுகளை அடையாளம் கண்டு அவற்றுடன் போரிட ஒருவருடைய சரீரத்திற்குப் பயிற்சியளிக்கத் தடுப்பூசி மருந்துகள்

உதவுகின்றன. ‘கோவிட்-19’ நோயைத் தோற்றுவிக்கும் வைரஸ்-ஐ அடையாளம் கண்டுஅதனோடு போரிட சரீரத்திற்கு இந்த ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து உதவுகிறது.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் பாதுகாப்பானவையா?

ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக அனைத்துத் தடுப்பூசிகளையும், மருந்துகளையும், இதர மருத்துவ உற்பத்திப் பொருட்களையும் ஒழுங்குறுத்தி அவற்றிற்கு அங்கீகாரம் அளிக்கும் விஞ்ஞானிகளையும், மருத்துவ வல்லுநர்களையும் கொண்டுள்ள அமைப்பே ‘மருத்துவ சிகிச்சைச் சரக்குகள் நிர்வாகம்’ (Therapeutic Goods Administration (TGA)) என்பதாகும். ஆஸ்திரேலியாவில் பயன்படுத்த அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக, அனைத்துக் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளையும் அவற்றின் தரம், பாதுகாப்பு மற்றும் செயலூக்கம் ஆகியவற்றிற்காக TGA சோதிக்கும். ஆஸ்திரேலியாவில் அனைத்துத் தடுப்பூசி மருந்துகளும் கடந்தாகவேண்டிய பொதுவான செயல்முறையாகும் இது.

அனைத்துத் தடுப்பூசிகளும் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்த TGA-யிலுள்ள மருத்துவ வல்லுநர்கள் அனைத்துத் தடுப்பூசி மருந்துகளையும் தொடர்ந்து பரிசோதித்து வருகின்றனர். மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிறகும், தடுப்பூசி மருந்துகளின் பலன்கள் அவற்றின் ஆபத்துகளை விட அதிகமாக இருப்பதாக அவை காண்பிக்கும் பொழுதும் மட்டுமே தடுப்பூசி மருந்துகள் ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக அங்கீகரிக்கப்படுகின்றன.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் மிக விரைவாக உருவாக்கப்படுள்ளனவா?

பாதுகாப்பானதாகவும், செயலூக்கம் மிக்கதாகவும் இருப்பதற்கென ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் உருவாக்கப்பட்டன. இவை மிக விரைவாக உருவாக்கப்படுள்ளதைப் போலத் தோன்றலாம், இருந்தாலும், இந்தப் பெருந்தொற்று துவங்கியதில் இருந்தே உலகெங்கும் உள்ள விஞ்ஞானிகள் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளை உருவாக்கக் கடுமையாய் ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்றனர். மற்ற தடுப்பூசி மருந்துகளுக்கும் இதே செயல்பாடுமுறையே பின்பற்றப்படுகிறது, மற்றும் இதற்கான எவ்வொரு படிநிலையும் தவிர்க்கப்படவில்லை.

பின்வரும் காரணங்களை முன்னிட்டு பாதுகாப்பான மற்றும் செயலூக்கம் மிக்கத் தடுப்பூசிகள் விரைவாக உருவாக்கப்பட்டன:

- ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியில் முதலீடு செய்யப்பட்ட பெரும் நிதியுதவித் தொகைகள்
- மருந்துகளின் உருவாக்கத்தினைத் துரிதப்படுத்துவதற்குக் கிடைத்த புதிய தொழில்-நுட்பம்
- உலகெங்கும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் கூட்டு ஒத்துழைப்பு

- ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படுவதற்குப் பதிலாக, 'மருத்துவ-சோதனை-முயற்சி'(clinical trial)கள் மற்றும் அங்கீகாரச் செயல்பாட்டு முறைகள் ஆகியவற்றிலுள்ள சில படி-நிலைகள் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

இந்தத் தடுப்பூசி மருந்துகள் கூடிய விரைவில் நமக்குக் கிடைப்பதற்கு இது உதவியது.

## 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் எவ்வாறு நமக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன?

'கோவிட்-19' நோயைத் தோற்றுவிக்கும் வைரஸ்-ஐ அடையாளம் கண்டு அதனோடு போரிட 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் உங்களுடைய உடலுக்குக் கற்றுத் தருகின்றன. இந்தத் தடுப்பூசி மருந்துகளில் 'கோவிட்-19' கிடையாது. இந்தத் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதன் காரணமாக உங்களுக்குக் 'கோவிட்-19' ஏற்பட இயலாது. நோயை ஏற்படுத்தாமல், இந்த வைரஸ்-இற்கு எதிரான பாதுகாப்பை உடலில் ஏற்படுத்திக்கொள்வதற்கு தடுப்பூசி மருந்துகள் ஒரு பாதுகாப்பான வழியாகும்.

பயன்பாட்டிற்கென ஆஸ்திரேலியாவில் அங்கீகரிக்கப்பட்டுள 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளானவை பாரதூரமான நோயிலிருந்தும், மருத்துவமனைக்குச் செல்வதிலிருந்தும், மரணத்திலிருந்தும் பாதுகாப்பு அளிப்பதில் மிகவும் சிறந்தவை என்று காண்பிக்கப்பட்டுள்ளன.

'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளைப் பற்றியும், சமுகத்தினரைப் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதில் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வது ஏன் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கிறது என்பதைப் பற்றியும் நீங்கள் உங்களுடைய மருத்துவருடன் பேசலாம்.

## 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளை இட்டுக்கொள்வதன் காரணமாக எந்தப் பக்க விளைவுகள் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவேண்டும்?

எல்லாத் தடுப்பூசி மருந்துகளுக்கும் சில பக்க விளைவுகள் இருக்கலாம். இந்தப் பக்க விளைவுகள் பொதுவாக மிதமானவை, மற்றும் இவை ஒரு சில நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும்.

பக்க விளைவுகளில் பின்வருவன உள்ளடங்கலாம்:

- ஊசி இடப்பட்ட பிறகு புஜத்தில் வலி
- சுரம்
- தசை வலிகள்
- தலைவலிகள்.

தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு உங்களுக்குக் கேள்விகள் அல்லது கரிசனங்கள் ஏதும் இருந்தால், உங்களுடைய தடுப்பூசி மருந்து சிகிச்சையகம் அல்லது உங்களுடைய மருத்துவருடன் தொடர்புகொள்ளுங்கள்.

‘வாக்ஸ்செவ்ரியா’ (ஆஸ்ட்ரா-ஸெனெகா) தடுப்பூசி மருந்திற்கும், இரத்த உறைவுகள் மற்றும் குறைவான இரத்த வட்டு அளவுகளோடு சம்பந்தப்பட்ட மிக அரிதானதொரு நிலைக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. இதைப் பற்றி https://www.health.gov.au/resources/publication/astrazeneca-information-other-languages எனும் வலைத்தலப் பக்கத்தில் மேலதிகமாக வாசியுங்கள்

## இந்த வைரஸ்-இன் பரவலை ‘கோவிட்-19’ தடுப்பூசிகள் குறைக்குமா?

நீங்கள் மிகவும் நோய்வாய்ப்படுவதிலிருந்தும், மருத்துவமனைக்குச் செல்வதிலிருந்தும், மரணமடைவதிலிருந்தும் தடுக்க உதவுவதில் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் மிகவும் செயலூக்கம் உள்ளவை. இந்த வைரஸ்-இன் பரவலைக் குறைக்க ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் உதவுகின்றன என்றும் ஆரம்பநிலை ஆதாரம் காண்பிக்கிறது.

தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு யாராவது ‘கோவிட்-19’ காரணமாக நோய்வாய்ப்பட்டால், அவர்களால் மற்றவர்களுக்கு நோய் ஏற்படுவதற்கான சாத்தியம் ஒப்பீட்டளவில் தமது தடுப்பூசியை இட்டுக்கொள்ளாதவர்களால் மற்றவர்களுக்கு நோய் ஏற்படுவதற்கு இருக்கும் சாத்தியத்தை விட குறைவு என்று ஆராய்ச்சி ஆதாரம் குறிகாட்டுகிறது.

## கர்ப்ப நிலையை அல்லது தாய்ப்பால் ஊட்டலை ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் பாதிக்குமா?

நீங்கள் கர்ப்பமாகவோ, தாய்ப்பால் ஊட்டிக்கொண்டோ அல்லது கர்ப்பமடையும் திட்டத்திலோ இருந்தால், ‘கோமிர்நாட்டி’ (‘ப்ஃபைசர்’) அல்லது ‘ஸ்பைக்வேக்ஸ்’ (‘மொடெர்னா’) கோவிட்-19 தடுப்பூசியை இட்டுக்கொள்ளுமாறு உங்களுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கும், தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களுக்கும் ;ப்ஃபைசர்’ அல்லது ‘மொடெர்னா’ தடுப்பூசி மருந்துகள் பாதுகாப்பானவை என்று உலகளாவிய ஆய்வு காண்பிக்கிறது.

உங்களுக்குக் ‘கோவிட்-19’ தொற்று ஏற்பட்டால், நீங்களும் உங்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையும் ஆபத்தில் இருக்கக்கூடும். இந்த ஆபத்துகளாவன:

- மருத்துவமனைக்குச் செல்லும் தேவை ஏற்படுவதற்கான அதியுயர் ஆபத்து
- பிரசவ நேரத்திற்கு முன்பே குழந்தை பிறப்பதற்கும், மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்படுவதற்குமான சிறிது அதிக வாய்ப்பு
- சா-பிறவியாக குழந்தை பிரசவிப்பதற்கான (உயிர் இல்லாமல் குழந்தை பிறத்தல்) சிறிது உயர்ந்த ஆபத்து.

கர்ப்ப-காலத்தின் எவ்வொரு நேரத்திலும் ‘கோவிட்-19’ தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொள்வது இந்த ஆபத்துகளை மட்டுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த வழியாகும்.

நீங்கள் தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருந்து 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா' தடுப்பூசி மருந்தினை உங்களால் பெற இயலவில்லை என்றால், தடுப்பூசி இட்டுக்கொள்வதனால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை விட அதன் பலன்கள் அதிகமாக இருக்குமேயானால், 'ஆஸ்ட்ரா-ஸெனெகா'-வை இட்டுக்கொள்வதை நீங்கள் கருத்தில் கொள்ளலாம். நீங்கள் இட்டுக்கொள்ளும் தடுப்பூசி எதுவாக இருந்தாலும், இதற்கு முன்பாக நீங்கள் உங்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தவேண்டிய தேவையில்லை.

கர்ப்ப-காலத்தில் அல்லது தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் காலத்தில் 'கோவிட்-19' தடுப்பூசிகளின் பாதுகாப்பைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.
https://www.health.gov.au/resources/translated/pregnancy-and-covid-19-vaccines-other-languages
எனும் வலைத்தலப் பக்கத்தில் இன்னும் அதிகத் தகவல்களைக் காணலாம்

## 'கோவிட்-19' தடுப்பூசிகள் மலட்டுத்தன்மையை உண்டாக்குமா?

ஆண்களில் அல்லது பெண்களில் 'கோவிட்-19' தடுப்பூசிகள் மலட்டுத்தன்மையை உண்டாக்கும் என்று காண்பிக்கும் விஞ்ஞானபூர்வ அதாரம் எதுவும் இல்லை.

தடுப்பூசி மருந்து ஒன்று பாதுகாப்பானதாகவும், செயலூக்கம் உள்ளதாகவும் இருந்தாலொழிய TGA அதை அங்கீகரிக்காது. ஆண்கள் அல்லது பெண்களுடைய இனப்பெருக்கத் திறன் மீது தடுப்பூசி ஒன்று தாக்கம் செலுத்தினால் TGA அதை அங்கீகரிக்காது என்பது இதன் அர்த்தமாகும். TGA -யினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 'கோவிட்-19' தடுப்பூசி எதற்கும் மலட்டுத்தன்மை ஒரு பக்க விளைவு என்று ஆய்வுகளால் காணப்பட்டிருக்கவில்லை.

## 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளை யாரெல்லாம் பெற இயலும்?

ஆஸ்திரேலியாவிலுள்ள 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒவ்வொருவரும் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இலவசமாகப் பெறலாம். உங்களுடைய தடுப்பூசி மருந்தினை நீங்கள் ஒரு அரசாங்கத் தடுப்பூசி மருந்தளிப்பு சிகிச்சையகத்தில் பெற்றால், உங்களுக்கு 'மெடிகெயர்' அட்டை ஒன்று தேவையில்லை.https://covid-vaccine.healthdirect.gov.au/ எனும் வலைத்தலத்தில் உள்ள vaccine clinic finder -ஐப் பயன்படுத்தித் தடுப்பூசி சிகிச்சையகம் ஒன்றைக் கண்டறிந்து 'கோவிட்-19' தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கான சந்திப்புவேளை ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம்

## குழந்தைகளால் 'கோவிட்-19' தடுப்பூசிகளைப் பெற இயலுமா?

12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளால் 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா' 'கோவிட்-19' தடுப்பூசியைப் பெற இயலும்.

‘மருத்துவ சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம் (The Therapeutic Goods Administration)’ (ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக அனைத்துத் தடுப்பூசிகளையும், மருந்துகளையும், மற்ற மருத்துவப் பொருட்களையும் ஒழுங்குறுத்தும் விஞ்ஞான மற்றும் மருத்துவ வல்லுநர்கள்) எனும் அமைப்பினர் 12 மற்றும் இதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு ‘ஃபைசர்’ மற்றும் ‘மொடெர்னா’ தடுப்பூசிகள் கொடுக்கப்படவேண்டுமென சிபாரிசு செய்கின்றனர்.

உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்திற்கும் சரியானது என்ன என்பதைத் தெரிந்துகொள்ள, உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தின் இரண்டு மருந்தளவுகளை நான் இட்டுக்கொள்ள வேண்டுமா? அது செயலூக்கமாக இருப்பதற்கு அவை ஒரே வகையான ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தாக இருக்கவேண்டுமா?

ஆம், ஒரே ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தின் இரண்டு மருந்தளவுகளை இட்டுக்கொள்வது மிகச் சிறந்தது என்று ATAGI-யைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர். இதற்கும் TGA அமைப்பும் ஒழுங்குறுத்து அங்கீகாரத்தினை அளித்துள்ளது.

நீங்கள் இட்டுக்கொண்டுள்ள தடுப்பூசி மருந்து எந்த வகை என்பதையும், உங்களுடைய இரண்டாவது சந்திப்புவேளையை நீங்கள் எப்போது ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் உங்களுக்குத் தடுப்பூசி இடும் நபர் உங்களுக்குச் சொல்வார்.

## ‘கோவிட்-19’ தடுப்பூசியின் மூன்றாவது மருந்தளவு ஒன்று எனக்குத் தேவைப்படுமா?

நோயெதிர்ப்புத் திறன் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு ‘கோவிட்-19’ தடுப்பூசியின் மூன்றாவது மருந்தளவு ஒன்றை ஆஸ்திரேலிய நோயெதிர்ப்புத்-திறனேற்றல் வல்லுநர்களான ATAGI சிபாரிசு செய்கிறது. நோயெதிர்ப்புத் திறன் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மக்கள்தொகையில் இருக்கும் மற்றவர்களை விட நோயெதிர்ப்புத் திறன் அளவுகள் முறைவாக இருக்கும். மற்றவர்களுக்கு இரண்டு மருந்தளவுகளால் கிடைக்கும் அதே பாதுகாப்பினைப் பெற இவர்களுக்கு இந்த மூன்றாவது மருந்தளவு தேவைப்படும்.

தமது இரண்டாவது ‘கோவிட்-19’ மருந்தளவை இட்டுக்கொண்டதிலிருந்து இரண்டு முதல் ஆறு மாதங்களுக்குள்ளாக தகுதி பெறுபவர்கள் அவர்களுடைய மூன்றாவது மருந்தளவினை இட்டுக்கொள்ள வேண்டும்.

நோயெதிர்ப்புத் திறன் கடுமையாகப் பாதிக்கப்படாதவர்களுக்கு ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தின் மூன்றாவது அளவு இந்தக் கட்டத்தில் தேவையில்லை, ஏனெனில் தடுப்பூசி மருந்தின் இரண்டு அளவுகளுடன் இந்த வைரஸ்-இற்கு எதிராகப் போதுமான பாதுகாப்பினை அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ளனர்.

## என்னுடைய ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்திற்கான முன்பதிவை நான் எவ்வாறு செய்யலாம்?

https://covid-vaccine.healthdirect.gov.au எனும் வலைத்தலத்தில் உள்ள vaccine clinic finder -ஐப் பயன்படுத்தித் தடுப்பூசி சிகிச்சையகம் ஒன்றைக் கண்டறிந்து ‘கோவிட்-19’ தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கான சந்திப்புவேளை ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

உங்களுடைய தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கான முன்பதிவைச் செய்துகொள்வதைப் பற்றி நீங்கள் உங்களுடைய மருத்துவர் அல்லது இத் திட்டத்தில் பங்குபற்றும் சமூக மருந்தளிப்பாள(community pharmacist)ருடனும் பேசலாம்.

## ஆஸ்திரேலியாவில் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளை இட்டுக்கொள்ளவேண்டியது கட்டாயமா?

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வது சுயவிருப்பம். ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதா, இல்லையா என்ற தெரிவினை ஒருவர் மேற்கொள்ளலாம். ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளாததற்காக நீங்கள் அபராதம் பெறமாட்டீர்கள்.

முதியோர் இல்லங்களில் பணியாற்றுபவர்களுக்கு ‘கோவிட்-19’-இற்கு எதிரான தடுப்பூசியை இட்டுக்கொள்ளவேண்டியது ஒரு தேவைப்பாடாகும். சில மாநிலங்களுக்கும், எல்லைப்பகுதிகளுக்கும் அவற்றிற்கே உரித்தான தடுப்பூசியேற்றல் தேவைப்பாடுகள் உள்ளன. மருத்துவ நிலைகளின் காரணமாகத் தடுப்பூசி இட்டுக்கொள்ள இயலாதவர்களுக்கென விதிவிலக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## வெளி நாடுகளிலிருந்து வரும் தடுப்பூசி மருந்துகளில் ஒன்றை நான் இட்டுக்கொள்ளலாமா?

ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக ‘TGA’ -யினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளை மட்டுமே ஆஸ்திரேலியாவில் உள்ளவர்கள் இட்டுக்கொள்ள இயலும். இந்தத் தடுப்பூசி மருந்துகள் மற்ற நாடுகளில் பயன்படுத்தப்படுவதற்காகவும் அங்கீகரிக்கப்படலாம். இணையம் மூலமாக நீங்கள் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து ஒன்றை வாங்க முயற்சிக்கக் கூடாது, ஏனெனில் இவை பாதுகாப்பு அற்றதாகவும், போலியானதாகவும் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது.

## தடுப்பூசி மருந்தினை நான் இட்டுக்கொண்ட பிறகும், ‘கோவிட்-19’-இன் பரவலைத் தடுப்பதற்கான மற்ற முன்னெச்சரிக்கைகளை நான் மேற்கொள்ளவேண்டுமா?

உங்களுடைய தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகும், ‘கோவிட்-19’-இன் பரவலைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை நீங்கள் தொடர்ந்து மேற்கொண்டுவர வேண்டியது முக்கியம்.

மற்றவர்களிடமிருந்து 1.5 மீட்டர் தூர இடைவெளி விட்டு விலகியிருங்கள், சோப்பு மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி உங்களுடைய கைகளை அவ்வப்போது தவறாமல் கழுவிக்கொண்டிருங்கள், உடல்நலம் சரியில்லாமல் இருக்கும்போது வீட்டிலேயே இருங்கள் மற்றும் 'கோவிட்-19' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளுங்கள், மற்றும் தேவைப்பாடு இருக்கும்போது முகக் கவசம் ஒன்றை அணியுங்கள்.

## 'கோவிட்-19' தொற்று ஏற்கனவே ஏற்பட்டு இருப்பவர்களுக்கு இப்போதும் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ள வேண்டிய தேவை இருக்குமா?

'கோவிட்-19' தொற்று ஏற்கனவே ஏற்பட்டு குணம் அடைந்திருப்பவர்கள் இப்போதும் தடுப்பூசி இட்டுக்கொள்ள வேண்டும். 'கோவிட்-19'-ஐ ஏற்படுத்தும் இந்த வைரஸ் ஒரு புதிய வைரஸ் ஆகும், மற்றும் தொற்றிற்குப் பிறகு இயற்கையான நோயெதிர்ப்புத் திறன் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கலாம் என்பது வல்லுநர்களுக்குத் தெரியாது. மீண்டும் தொற்று ஏற்படும்போது இருக்கும் பாதுகாப்பு காலப் போக்கில் குறைவதற்கான சாத்தியம் வெகுவாகும். ஆகவே, நோயெதிர்ப்பு சக்திக்கு வலுவூட்டவும், பாதுகாப்பு இன்னும் அதிக காலத்திற்கு நீடிப்பதை உறுதிப்படுத்தவும் தடுப்பூசியை இட்டுக்கொள்வது நல்லறிவுள்ள செயலாகும்.

## 'ஃப்ளூ' தடுப்பூசி மருந்து 'கோவிட்-19'-இல் இருந்து எனக்குப் பாதுகாப்பு அளிக்குமா?

'இன்ஃப்ளூயென்ஸா' ('ஃப்ளூ') மற்றும் 'கோவிட்-19' ஆகிய இரண்டுமே 'வைரஸ்'கள்தான், ஆனால் அவை இரண்டும் ஒன்றல்ல. 'ஃப்ளூ' தடுப்பூசி மருந்தானது 'கோவிட்-19'-இற்கு எதிரான நோயெதிர்ப்புத் திறனையோ, பாதுகாப்பையோ கொடுக்காது.

'கோவிட்-19' தடுப்பூசி மருந்தானது 'ஃப்ளூ' சுரத்திலிருந்துப் பாதுகாப்பு அளிக்காது. 'ஃப்ளூ' தடுப்பூசி மற்றும் 'கோவிட்-19' தடுப்பூசி ஆகிய இரண்டையுமே இட்டுக்கொள்ளுமாறு சிபாரிசு செய்யப்படுகிறது, ஆனால், 'ஃப்ளூ' தடுப்பூசிக்கும், 'கோவிட்-19' தடுப்பூசிக்கும் இடையே 7 நாட்களுக்கான இடைவெளியை நீங்கள் விடவேண்டும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

## 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு முன்பாக 'இரத்த மெலிதாக்கி' மருந்தினை நான் உட்கொள்ளவேண்டுமா?

இல்லை, உங்களுடைய தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு முன்பாக 'இரத்த மெலிதாக்கி' மருந்தினை நீங்கள் உட்கொள்ளவேண்டிய தேவை இல்லை.

உங்களுடைய மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்டாலொழிய, உங்களுடைய வழமையான மருந்துகளை நீங்கள் உட்கொண்டுவரவேண்டும்.

## ‘கோவிட்-19’ மாற்றம் அடைந்தால், ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் செயல்படுமா?

எல்லா ‘வைர’ஸுகளும் காலப் போகில் மாற்றமடையும். இதைத் ‘திரிபு’ (mutation) என்று சொல்வர். ‘கோவிட்-19’-இன் புது வகைக(mutations)ளுக்கு எதிராக ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் இப்போதும் செயலூக்கம் உள்ளவையாக இருக்கும் என்று தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும் விஞ்ஞான ஆதாரங்கள் காண்பிக்கின்றன. அவர்களது வழமையான அங்கீகரிப்பு மற்றும் கண்காணிப்பு செயல்பாட்டு முறைகளின் ஒரு பகுதியாக, ‘மருத்துவ சிகிச்சைச் சரக்குகள் நிர்வாக’(Therapeutic Goods Administration)-அமைப்பினர் இதைத் தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வருவார்கள்.

‘தசைவிறைப்பு’ (tetanus) மற்றும் ‘கக்குவான் இருமல்’ (whooping cough) ஆகியவற்றிற்கான தடுப்பூசியேற்றங்களுக்கு இருப்பதைப் போல, ஊக்க-ஊசிக(booster shots)ளை இட்டுக்கொள்ளவேண்டிய தேவை மக்களுக்கு இருக்கலாம் என்பது இதன் பொருளாகலாம். ஒவ்வொரு வருடமும் ‘ஃப்ளு’ தடுப்பூசியை நாம் இட்டுக்கொள்வதைப் போல, நாம் மீண்டும் தடுப்பூசியை இட்டுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பது இதன் அர்த்தமாகலாம். இதைப் பற்றிய ஆய்வுகளை ஆராய்ச்சியாளர்கள் இன்னும் மேற்கொண்டுவருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் நீங்கள் இட்டுக்கொள்ள வேண்டிய ஊக்க-ஊசி ஒன்றைப் போன்ற கூடுதல் ஊக்க-மருந்துகள் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளுக்குத் தேவைப்படுமா என்று தீர்மானிப்பதற்கான ‘மருத்துவ-சிகிச்சைச் சோதனை’(clinical trial)கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ‘கோவிட்-19’ ஊக்க ஊசிகள் உங்களுக்குத் தேவைப்படுமா, மற்றும் எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை தேவைப்படும் என்பதை எதிர்காலத்தில் உங்களுடைய மருத்துவர் உங்களுக்கு விளக்கிச் சொல்லலாம்.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் என்னுடைய மரபணுக்க(genes)ளை அல்லது ‘டி.என்.ஏ’ (DNA) -வை மாற்றிவிடுமா?

இல்லை, ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் உங்களுடைய மரபணுக்க(genes)ளை அல்லது ‘டி.என்.ஏ’-வை மாற்றுவதில்லை.

‘கோவிட்-19’-இற்கு எதிரான நோயெதிர்ப்புப் பதில்வினை ஒன்றை உருவாக்க உங்களுடைய உடலுக்குக் கற்பிப்பதற்காக, சில ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் ‘செய்தியாள் ஆர்.என்.ஏ’ (Messenger RNA (mRNA))-யின் துணுக்கு ஒன்றைப் பயன்படுத்துகின்றன. இந்தத் தடுப்பூசி மருந்துகள் உங்களுக்குக் ‘கோவிட்-19’-ஐக் கொடுப்பதில்லை.

‘செய்தியாள் ஆர்.என்.ஏ’ (mRNA) உள்ள தடுப்பூசிகளில் இருக்கும் ‘ஆர்.என்.ஏ’ (RNA)-யில் இருந்து ‘டி.என்.ஏ’ (DNA) என்பது மாறுபட்டதொரு மூலக்கூறாகும். இந்த ‘எம்.ஆர்.என்.ஏ’ (mRNA) என்பது உங்களுடைய ‘டி.என்.ஏ’ (DNA)-யிற்கு

எதுவும் செய்வதில்லை, மற்றும் உங்களுடைய சரீரத்திற்குள் நுழைந்த பிறகு இது விரைவாக நொறுக்கப்பட்டுவிடும்.

## இந்தத் தடுப்பூசி மருந்து என்னுடைய மரபணுக்க(genes)ளை அல்லது 'டி.என்.ஏ' (DNA)-வை சேகரிக்குமா?

இல்லை, தடுப்பூசி மருந்து ஒன்றை இட்டுக்கொள்ளும்போது, அது, பொதுவாக உங்களுடைய மேல் புஜத்திலுள்ள தசைக்குள்ளாக, உங்களுடைய சரீரத்திற்குள் செல்லும். ஆஸ்திரேலியாவில் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் ஊசி மூலமாக உட்செலுத்தப்படுகின்றன. உங்களுடைய மரபணு(genes)க்கள் அல்லது 'டி.என்.ஏ' (DNA) உட்பட, உங்களுடைய சரீரத்திலிருந்து எதுவும் எடுக்கப்படுவதில்லை. 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதனால் மரபணுக்கள் அல்லது 'டி.என்.ஏ' (DNA) சேகரிக்கப்படுவதில்லை.

## 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் என்னை 'இண்ட்டெர்னெட்' (இணைய-வலை)-உடன் தொடர்புபடுத்துமா?

இல்லை, 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் உங்களை 'இண்ட்டெர்னெட்' (இணைய-வலை)-உடன் தொடர்புபடுத்துவதில்லை - மற்றும் அப்படித் தொடர்புபடுத்தவும் அவற்றால் இயலாது. இந்தத் தடுப்பூசி ஒரு மருத்துவ உற்பத்திப்பொருளாகும், இது மின்னணு சார்ந்ததல்ல.

## 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளில் 'மைக்ரோ-சிப்'(microchip)புகள் அல்லது 'கண்காணிப்பு நுட்பம்' (tracking technology) உள்ளதா?

'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் எதிலும் மென்பொருளோ, 'மைக்ரோ-சிப்'புகளோ இல்லை. அவற்றால் மக்களைக் கண்காணிக்க இயலாது.

## 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளால் எனக்குக் 'கோவிட்-19'-ஐ ஏற்படுத்த இயலுமா?

ஆஸ்திரேலியாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தடுப்பூசி மருந்துகள் எதிலும் 'கோவிட்-19'-ஐ ஏற்படுத்தும் உயிருள்ள வைரஸ் இல்லை. உங்களுக்குக் 'கோவிட்-19'-ஐ ஏற்படுத்தி உங்களை சுகவீனப்படுத்தவும், இந்த வைரஸ்-ஐ நீங்கள் உதிர்க்குமாறு செய்யவும் 'கோவிட்-19' தடுப்பூசியினால் இயலாது என்பது இதன் பொருள்.

சுரம், தசை வலிகள் மற்றும் அசதி போன்ற சில 'கோவிட்-19' தடுப்பூசிகளால் ஏற்படும் பக்க விளைவுகள் 'கோவிட்-19'-இற்கான அறுகுறிகளைப் போலத் தோன்றக்கூடும். இந்த அறிகுறிகளானவை தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதனால் ஏற்படும் பொதுவான எதிர்வினையின் பகுதியாகும். 'கோவிட்-19'-இற்கு எதிரான பாதுகாப்பை சரீரம் உருவாக்கிக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளமாக இவை இருக்கலாம்.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளில் விலங்கு-சார் உற்பத்திப்பொருட்கள் அடங்கியுள்ளனவா?

ஆஸ்திரேலியாவில் பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளில் விலங்கு-சார், இறைச்சி அல்லது முட்டை உற்பத்திப்பொருட்கள் எதுவும் இல்லை.

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளைப் பற்றி மதத் தலைவர்கள் கொண்டுள்ள கருத்து என்ன?

ஆஸ்திரேலியாவில் பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளைப் பல மதத் தலைவர்கள் அனுமதித்துள்ளனர்.

22 டிசம்பர் 2020 அன்று, ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளின் பயன்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக அறிக்கை ஒன்றை ‘வாட்டிகன்’ (Vatican) வெளியிட்டது. இந்த ‘வாட்டிகன்’ அறிக்கையினை நீங்கள் https://www.vatican.va/roman_curia/congregations/cfaith/documents/rc_con_cfaith_doc_20201221_nota-vaccini-anticovid_en.html எனும் வலைத்தலப் பக்கத்தில் வாசிக்கலாம்

‘ஆஸ்திரேலிய ஃபட்வா அவை’ (Australian Fatwa Council) 13 ஃபிப்ரவரி 2021 அன்று ‘கோவிட்-19 தடுப்பூசி மருந்து ஃபட்வா’ ஒன்றை வெளியிட்டது. நம்பிக்கைக்குரிய இஸ்லாமிய மருத்துவர்களுடனும், மருத்துவ வல்லுநர்களுடனும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கலந்துரையாடலுக்குப் பிறகு இந்த ‘ஃப்ட்வா’ வெளியிடப்பட்டது. ஆஸ்திரேலியாவின் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் இஸ்லாமிய சட்டப் பிரகாரம் அனுமதிக்கத்தக்கவை என்று இந்த ‘ஃபட்வா’ அறிவுரைக்கிறது. ‘ஆஸ்திரேலிய ஃபட்வா அவை’யின் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து குறித்த ‘ஃபட்வா’-வை https://www.anic.org.au/fatwa-council/ எனும் வலைத்தலப் பக்கத்தில் நீங்கள் வாசிக்கலாம்

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளுக்கு ஆதரவாக மதப் பிரசங்கம் ஒன்றை ‘சிட்னி யூதர் பெரும் திருக்கோவில்’ 27 ஃபிப்ரவரி 2021 அன்று வெளியிட்டது. https://www.greatsynagogue.org.au/rabbiscorner.html எனும் வலைத்தலப் பக்கத்தில் இந்தப் பிரசங்கத்தினை நீங்கள் வாசிக்கலாம்

13 ஆகஸ்ட்டு 2021 அன்று ‘ஆஸ்திரேலிய இஸ்லாமிய மருத்துவ சங்கம்’ ‘கோவிட்-19’ தடுப்பூசிகளைப் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிக்கையினை நீங்கள் https://aimamed.com.au/feature-content/ எனும் வலைத்தலப் பக்கத்தில் காணலாம்

## ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளைப் பற்றிய கேள்விகள் எனக்கிருந்தால் நான் யாருடன் தொடர்புகொள்ளலாம்?

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளைப் பற்றி நீங்கள் யாருடனாவது பேச விரும்பினால், 1800 020 080 எனும் இலக்கத்தில் ‘தேசிய கொரோனாவைரஸ் உதவி இணைப்’(National Coronavirus Helpline)பினை அழையுங்கள். இந்த அவசர

உதவி இணைப்பு ஒவ்வொரு நாளும் 24 மணி நேரத்திற்கும் கிடைக்கும். மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு 131 450-ஐ அழையுங்கள்.

63 மொழிகளில் தகவல்கள் கிடைக்கும் www.health.gov.au/covid19-vaccines-languages எனும் 'சுகாதாரத் திணைக்கள'(Department of Health)த்தினது வலைத்தலப் பக்கத்தில் நீங்கள் மேலதிமாகத் தெரிந்துகொள்ளலாம்.

உங்களுடைய மருத்துவர் அல்லது உள்ளூர்ப் பகுதி சுகாதாரத் தொழிலருடனும் நீங்கள் பேசலாம்.

'சுகாதாரத் திணைக்களம்' (Department of Health) அல்லது 'மருத்துவ சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம்' (Therapeutic Goods Administration) போன்ற நம்பத்-தகுந்த மற்றும் அதிகாரப்-பூர்வ மூலங்கள் வழியாக நடப்புச் செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது முக்கியம்.